# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date:16.08.2023 |
| Deposition of Witness for | : அ.சா.2 | |
| Name | : பிரியதர்ஷன் | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

(1முதல் 4 எதிரிகள் ஆஜர் எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை-**

1. என் வீட்டில் நாங்கள் யாரெல்லாம் இருப்போம் என்றால் நான், எனது அண்ணன் மற்றும் எனது பெற்றோர்கள். எதிரிகள் என்னை கோவிலுக்கு வரக்கூடாது என்று கூறுவதற்கு என்ன காரணம் என்று போலிசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்து அதை தெரிந்துகொண்டார்களா என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து சங்ககிரி அரசுமருத்துவமனை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் தெரியவில்லை. எவ்வளவு நேரத்தில் மருத்துவமனை சென்றோம் என்றால் கால் மணி நேரத்தில்/ மேற்படி அரசுமருத்துவமனை முன்பு போலிசார் இருந்தார்கள் என்றால் இல்லை.

2. மருத்துவமனைக்கு போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் மறுநாள் காலையில் வந்தார்கள். மருத்துவமனையிலிருந்து போலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் இரவு 08.30 மணிக்கு சென்றுவிட்டு அரைமணி நேரத்தில் திரும்பவந்துவிட்டேன். நாங்கள் யாரெல்லாம் மருத்துவமனை சென்றோம் என்றால் நான், என்னுடைய அப்பா, சித்தப்பா, சித்தி, என்னுடைய அம்மா. சித்தியும், சித்தப்பாவும் எங்களுடன் வசிக்கிறார்களா என்றால் இல்லை அருகில் வசிக்கிறார்கள்.

3. நாங்கள் வசிக்கும் இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சத்தம்கேட்டு அருகில் இருந்தவர்கள் எல்லாம் அங்கு வந்ததாக போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சித்தி எங்கிருந்து வந்தார்கள் என்று போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் கோவில் திருவிழா என்பதால் வீட்டின் அருகில் கூட்டமாக இருந்தது என்றால் இல்லை பசங்கள் இருந்தார்கள். அவர்கள் அந்த பகுதி நபர்கள் என்றால் சரிதான். சித்தியை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. மருத்துவமனையில் எனது சித்தி மட்டும்தான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். சம்பவம் வீட்டிற்குள் நடந்ததா அல்லது வெளியில் நடந்ததா என்று போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 31.12.2020 ம் தேதி நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கோவில் திருவிழாவின்போது நாங்கள் வசூலித்த பணம் குறித்து எதிரிகள் கேள்விகேட்டதால் அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. எனது சித்தியை எதிரிகள் திட்டியதாக கூறுவது இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவை எதிரிகள் தாக்கியதாக கூறுவது இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் ரத்த கரை ஏற்பட்டதா என்றால் ஆமாம். என்னுடைய ஆடையில் ரத்தம் படிந்ததா என்றால் இல்லை சித்தியின் ஆடையில்தான் ரத்தம் படிந்திருந்தது. சம்பவமானது வீட்டிற்குள் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை வாசற்படியில் நடந்தது.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2023.08.16 15:17:05 +0530

Sd /- Priyadharshan

Judicial Magistrate No.1,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C.72/2022 | Date:16.08.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.3 | |
| Name | : | தங்கராஜ் | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

(1முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை-**

1. நான் சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். என் மகன் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் இரண்டு இருசக்கர வாகனத்தில் நான்கு பேர்களும் சென்றோம். மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் இரண்டு மணி நேரம் இருந்தேன். நானும், எனது மகனும் இரண்டு மணி நேரம் மருத்துவமனையில் இருந்தோமா என்றால் ஆமாம்.

2. அ.சா.1 யை யார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் அவருடைய கணவர் பழனிசாமி. என்ன நடந்தது என்று மருத்துவர்கள் விசாரித்தார்களா என்றால் ஆமாம். அப்போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது என்னிடமும், பழனிசாமியிடமும் செல்போன் இருந்தது என்றால் ஆமாம். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சுமார் 3 மணி நேரம் கழித்து சென்றோம். எனது வீடும், அ.சா.1-ன் வீடும் பக்கமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 மணிநேரமாக நான் எங்கிருந்தேன் என்றால் அ.சா.1-ன் வீட்டில் இருந்தேன்.

3. சம்பவம் நடைபெற்றதால் அது குறித்து ஆலோசித்தோமா என்றால் ஆலோசித்தோம். மேலும் ஊர் பெரியவர்களிடம் என்ன செய்யலாம் என்று

ஆலோசித்தோமா என்றால் ஆலோசித்தோம். அந்த சமயத்தில் அ.சா.1 க்கு முதல்உதவி சிகிச்சை செய்தோமா என்றால் செய்தோம். ஊர் பெரியவர்கள் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் தர்மகர்த்தா முத்தான் மற்றும் கோவில் நிர்வாக தலைவர் முருகேசன், மேற்படி கோவில் கமிட்டியில் நானும் உறுப்பினர் என்றால் பொருளாளர் ஆவேன். பொருளாளர் என்ற முறையில் கோவில் திருவிழாவிற்கு வசூல் செய்யும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. அந்த சமயம் கோவில் திருவிழா என்றால் இல்லை. அந்த சமயத்தில் எதிரிகள் புத்தாண்டு சிறப்பிப்பதற்காக கோவிலில் மைக்செட் போட்டிருந்தனர் என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்து அறநிலை துறையின் கட்டுபாட்டில் உள்ளதா என்றால் இல்லை பொதுகோவில். புத்தாண்டு சமயத்தில் மேற்படி கோவிலில் விழா நடக்கும் என்றால் சரிதான். மேற்படி விழா கோவில் கமிட்டியின் சார்பில் நடத்தப்படுமா என்றால் இல்லை. மேற்படி விழா நடத்துவதற்கு கோவில் கமிட்டி சார்பில் எதிர்ப்பு தெரிவித்தோமா அல்லது ஆதரவு தெரிவித்தோமா என்றால் எதிர்ப்பு தெரிவித்தோம். அந்த சமயத்தில் விழாவை காரணம் காட்டி நாங்களும் வசூல் செய்தோம் என்றால் இல்லை.

5. மேற்படி சம்பவம் தொடர்பாகத்தான் இந்த பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எப்போது மருத்துவமனை வந்து விசாரித்தார்கள் என்றால் இரண்டு நாட்கள் கழித்துவந்து விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக உடனடியாக விசாரிக்கவேண்டும் என்று கோவில் கமிட்டி சார்பாக காவல்நிலையத்தில் தெரிவித்தோமா என்றால் இல்லை. இந்த இடைப்பட்ட இரண்டு நாட்களில் காவல்நிலையத்தில் நாங்கள் புகார்கொடுத்தோமா என்றால் இல்லை. இடைப்பட்ட இரண்டு நாட்களில் போலிசார் வந்தார்களா என்றால் வந்து விசாரித்துவிட்டு சென்றார்கள். அதன்பிறகு எதிரிகளையும் போலிசார் காவல்நிலையத்தில் வரவழைத்து விசாரித்தார்கள் என்றால் ஆமாம்.

6. அதன்பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் இவ்வழக்கிற்காக கலந்து ஆலோசித்து பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் செல்வதுபோல் 31.12.2020 ம் தேதி அ.சா.1 ம், அ.சா.2 ம்

தாக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோவில் சார்பாக நான் வசூலித்தது சம்பந்தமாக எதிரிகள் கணக்கு கேட்டதால் அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கணக்கு வழக்கு கொடுக்காததால் ஊர் பொதுமக்களே விழா எடுத்துவிட்டார்கள் என்பதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2023.08.16 15:17:21
+0530

Sd /- Thangaraj

Judicial Magistrate No.1,
Sankari.